செ.வெ.எண். 20/அக்டோபர் தேதி : 12.10.2016

## <u>தருமபுரி மாவட்டம்</u>



தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஈச்சம்பாடி அணையினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.10.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

எதிர்வரும் வடகிழக்கு பருவமழையொட்டி மாவட்ட நிர்வாகம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் ஈச்சம்பாடி அணையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்னும் சில வாரங்களில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக்காலங்களில் ஆறுகள், கழிவுநீர் கால்வாய்கள், ஓடைகள் மழை நீர்த்தேங்காத வண்ணம் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தீயணைப்புத்துறை, மருத்துவத்துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை போன்ற பல்வேறு துறைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. தங்கள் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினால் ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் கட்டுப்பாட்டு அறையில் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 89003891077 என்ற எண்களுக்கு பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்நிலைகள் மற்றும் நகராட்சிக்குட்பட்ட கழிவு நீர்கால்வாய்களிலும் வடகிழக்கு பருவமழை எதிர்வருவதையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.